DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.308/2024**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பாண்டியராஜன் |
| Father Name | : | மொக்கபாண்டியன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2025.

( எதிரி ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது திருமங்கலம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். வழக்கு சமயத்தில் நான் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, 13.08.2022ம் தேதி 15.00 மணி அளவில் புகையிலை மற்றும் குற்றதடுப்பு சம்மந்தமாக நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலைய சரகம் கொடிமங்கலம் பகுதியில் நானும், பெண் முதல்நிலை காவலர் **சாட்சி எண்.2** மகாலட்சுமி, சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்.5** கணேஷ்குமார் ஆகியோர் ரோந்து செய்து வரும் போது, சந்தேகப்படும் வகையில் கொடிமங்கலம் அரசு உயர்நிலை பள்ளி அருகில் கையில் வெள்ளை நிற சாக்குபையுடன் நின்றுகொண்டிருந்தவரை விசாரிக்க அவர் வெள்ளைத்தாய் கணவர் பெயர் முருகன் என்றும் கிழக்கு தெரு, கொடிமங்கலம் குடியிருந்து வருவதாக கூறினார். எந்த அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து சாக்குபையில் இருக்கும் கூல்லிப் 23 பாக்கெட்டு, கணேஷ் புகையிலை 23 பாக்கெட்டையும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விற்பதாக வைத்திருப்பதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கணேஷ் புகையிலை விற்ற பணம் ரூ.930/– மற்றும் அவர் வைத்திருந்த புகையிலை பாக்கெட்டுகளை அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அத்தாட்சியில் கைப்பற்றிய கணேஷ் பாக்கெட் மற்றும் கூல்லிப் ஆகிய பொருட்களை 16.30 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்து எதிரி மீது காவல்நிலைய குற்ற எண்.266/2022 பிரிவு 6 (b), 7 (2), Tobacco Act r/w 328 இ.த.ச வழக்காக சார்பு ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்தார். நான் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எதிரியை பிடித்ததாக சொல்லப்படும் பகுதி ஆட்கள் நடமாட்டம் பகுதி என்றும், குடியிருப்புகள் உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். அந்த பகுதியில் உள்ள மக்களை சாட்சியாக விசாரிக்க சார்பு ஆய்வாளர் முயற்சி செய்தார், ஆனால் யாரும் முன்வராததால் தனிநபர் சாட்சியங்கள் சாட்சியாக போட இயலவில்லை. அவ்வாறு வர மறுத்த நபர்கள் மீது சார்பு ஆய்வாளர் அவர்கள் சட்டப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் பணி நிமித்தமாக செல்லும் போது எங்களுக்கிடையே தனிப்பட்ட பாக்கெட் நோட்டில் குறிப்பு ஏற்படுத்துவோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக பாக்கெட் நோட்டில் எழுதப்பட்ட விபரங்களை நான் காவல் ஆய்வாளரிடம் விசாரணையில் போது ஒப்படைக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை, எதிரி எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை, அதன் அடிப்படையில் எந்த பொருட்களையும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. நானோ, பெண் காவலரோ, சார்பு ஆய்வாளரோ சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் அதனால் தான்

பாக்கெட் டைரியை விசாரணைக்கு ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியில் என்னுடைய கையெழுத்து, சார்பு ஆய்வாளர் கையெழுத்து கீழே தேதிகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், காவல்நிலைய புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

S/d – S.John Sundaral Suresh, B.Sc., M.L.,

IV Additional District and Sessions Judge, Madurai.